DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 124/2024** |
| Deposition of Witness for | : PW 1 |
| Name | : கோமதி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 30.05.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 30th **May 2025.**

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். தற்போது என்னால் வேலை செய்ய இயலவில்லை. ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது கணவர். சுமார் 12 வருடத்திற்கு முன்பு ஒருநாள் இரவு சுமார் 10–10.30 மணியளவில் காந்திநகர் 4ம் தெருவில் உள்ள எனது வீட்டில் நான் துணிதுவைத்துக்கொண்டிருந்தேன். எனது கணவருக்கு மற்றொரு பெண்ணுடன் தொடர்பு உள்ளது. அந்த பெண் சொல்லி எதிரி கத்தியால் வலதுபக்க முதுகில் புஜத்திலிருந்து கீழாக குத்தி கிழித்துவிட்டார். அதனால் எனக்கு நுரையீரலில் ரத்தக்கசிவு ஏற்பட்டது. என்னை நேரடியாக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலகமாக சிகிச்சைக்காக கொண்டுசென்றார்கள். என்னிடம் காட்ட்ப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையததான். அந்த புகார்

வாக்குமூலத்தை நான் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் வைத்து கொடுத்தேன். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பகுதி பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>

சம்பவத்ததன்று எதிரி எதாவது அசிங்கமாக பேசினாரா என்றால் தேவடியா என்று அசிங்கமாக பேசினார். பெருமாள் மற்றும் குருசாமி எதிரியை சத்தம் போடவும் எதிரிஎன்னை பார்த்து அரையும் குறையுமாக குத்திவிட்டேன், என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 124/2024** |
| Deposition of Witness for | : PW 2 |
| Name | : பாப்பா |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 30.05.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 30th **May 2025.**

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் சித்தாள் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 கோமதி எனது மகள். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது மருமகன். சுமார் 8 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காந்திநகர் 4ம் தெருவில் எனது மகள் வாடகைக்கு குடியிருந்தார். இரவு 6–7 மணி இருக்கும். நான் எனது மகள் வீட்டிற்குபோய்விட்டு எனது வீட்டிற்கு வந்தபோது எனக்கு அக்கம்பக்கம் உள்ளவர்கள்எனது மகளை எதிரி குத்திப்போட்டுவிட்டார் என்று தகவல் சொன்னார்கள். நான் குடியிருந்த கழுகுமலை ரோட்டில் உள்ள கீழ 4ம் தெருவிலிருந்து எனது மகளின் வீட்டிற்கு சென்று பார்த்தபோது எனது மகளின் முதுகின் பின்புறம் வலது பக்கம் கத்திகுத்தி ரத்தம்பெருகிக்கிடந்தது. ஒரு போர்வையை கீழே போட்டு அதில் மகளை வைத்து ஆம்புலன்சிற்கு ஏற்றி சங்கரன்கோவில் மருத்துமவனைக்கு

போனோம். அங்கு திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு போகச்சொன்னார்கள். மருத்துவர் பார்த்துவிட்டு ரத்தம்அதிகமாக போய்விட்டது. பார்க்கமுடியாது என்று சொன்னார்கள். நான் கையில் காலில் விழுந்து எனது மகளை சிகிச்சை அளிக்குமாறு வேண்டினேன். அதன்பேரில் எனது மகளுக்கு ஒருமாதம் சிகிச்சை அளிக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். **மேற்படி புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.2 ஆககுறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பகுதி பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>

சாட்சி பெருமாள், குருசாமி ஆகியோர்கள் யார் என்றால் எனது மகன்கள். நான் சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக போலீசாரிடம் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. எதிரி அ.சா.1 யை அசிங்கமான வார்த்தைகளால் திட்டினாரா என்றால் எதிரி அ.சா.1 யை தேவடியா முண்ட என்று அசிங்கமாக பேசினார். அந்த வார்த்தைகளை கூறுவதற்கு மிகுந்த கூச்சமாக உள்ளது. நானும், எனது மகன்களும் சத்தம் போட்டதும் எதிரி என் மகளை பார்த்து உன்னை லேசாக குத்திவிட்டேன் உன்னை குத்தி கொன்றிருக்கவேண்டும் என்று மிரட்டினார்.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 124/2024** |
| Deposition of Witness for | : PW 3 |
| Name | : பெருமாள் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 30.05.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 30th **May 2025.**

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அக்கா. அ.சா.2 எனது அம்மா. ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது அக்கா கணவர். சம்பவம் நடந்த தேதி மாதம் எனக்கு ஞாபகம் இல்லை. சுமார் 5–6 வருடங்களுக்கு முன்பு நான் எனது வீட்டில் இருந்தேன். அக்கம்பக்கம்உள்ளவர்கள் எனது அக்காவை எனது மாமா குத்திவிட்டதாக தகவல் சொன்னார்கள். சம்பவம் கேள்விப்பட்டு எனது அக்கா வீட்டிற்கு சென்று நான் பார்த்தபோது தெருவில்ரத்தமாக கிடந்தது. எனது அக்காவை மருத்துவமனைக்கு கொண்டுசென்றுவிட்டார்கள். நான் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது எனது அக்காவிற்கு இடுப்பு பக்கம் காயம் இருந்தது. எனது அக்காவை மேல்சிகிக்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில்

நான், எனது நண்பன் குட்டி, எனது அம்மா ஆகியோர்கள் கொண்டுசென்றோம். போலீசார் மருத்துவமனையில் வந்து விசாரணை செய்தார்கள்.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பகுதி பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>**

13.02.2015ம் தேதி இரவு 9.45 மணியளவில் எனது அக்கா வீட்டில் வைத்து எதிரி எனது அக்காவை கத்தியால் குத்தியதை நான் நேரில் பார்த்தேன் என்றால் சரியல்ல. எதிரி எனது அக்காவை அசிங்கமாக பேசியதாக போலீசார் விசாரணையில் கூறவில்லை. நானும், குருசாமியும் எதிரியை சத்தம் போடவும் எதிரி அ.சா.1யை மிரட்டியதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லவில்லை. நான்சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு தற்போது எனது அக்காவுடன் பேச்சுவார்த்தை இல்லாததால் எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதற்காக நான் எனது அக்காவிடம் பேசமாட்டேன் என்றால் எனக்கும் எனது அக்காவிற்கும் சொத்துப்பிரச்சனை உள்ளதால் பேசமாட்டேன் .

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**